

திருவாசகம் - 28
வாழாப்பத்து கதைவழியில்
கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



உ

சிவமயம்

# வாழாப்பத்து கதை வடிவில்
# முத்தி உபாயம்
# திருப்பெருந்துறையில் அருளியது

**பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே பற்றுநான் மற்றிலேன்**
**கண்டாய் சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே திருப்**
**பெருந்துறையுறை சிவனே ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத்**
**துரைக்கேன் ஆண்டநீ அருளிலை யானால் வார்கடல் உலகில்**
**வாழ்கிலேன் கண்டாய் வருகஎன்றருள் புரியாயே. 01**

கதிரேசன் சிவபூசையை முடித்துவிட்டு வெளியே வந்தபோது சுந்தரேசனின் மனைவியின் தகப்பன் பரமேஸ்வரன் வந்திருந்தார். முழுமையாக முகச்சவரஞ்செய்து திருநீறணிந்து சந்தனத் திலகத்துடன் காட்சியளிப்பவர் இப்போ தாடி வளர்த்திருக்கிறார். நீறும் அணியவில்லை. சுந்தரேசனைத் தனது மகளுக்குத் திருமணம் செய்து கொடுக்க அவர் விரும்பவில்லை. சுந்தரேசனும் அவரது மகளான மனோகரியும் விரும்பி இருந்தமையால் அவர் தான் பரமேஸ்வரனைச் சமாதானப்படுத்தி அத் திருமணத்தைச் செய்து வைத்தார். மனோகரி சிவபக்தை. ஒழுக்கமான பெண். திடீரென்று மனக்குழப்பமடைந்து தற்கொலை செய்து கொண்டாள். அது கதிரேசனை மிக மிகப் பாதித்துவிட்டது. அவர் பரமேஸ்வரனைச் சந்தித்துச் சொன்னார்; “பரமேஸ், உனது மகள் சுந்தரேசனைத் தீவிரமாகக் காதலிப்பதாகக் கூறுகிறாள். நீங்கள் செய்து வைக்காவிட்டால் தான் வீட்டைவிட்டு வெளியேறிச் சென்று சுந்தரேசனோடு வாழப்போவதாகக் கூறுகிறாள். அந்த நிலை உங்களது குடும்பத்திற்கு அவமானத்தைக் கொடுக்கும்” என்றார் கதிரேசன்.

“உண்மைதான் ஐயா, அந்தக் குடும்பம் ஒழுக்கமில்லாதது. களவு, பொய், சூது போன்ற பல தீய செயல்களைச் சுந்தரேசனின் தந்தையும் சகோதரர்களும் செய்கிறார்கள். அதை இப்போ சுந்தரேசன் செய்யாவிட்டாலும் காலப்போக்கில் செய்யமாட்டான் என்று உங்களால் உறுதிகூற முடியுமா…?” என்று கேட்டவர்.

அதன் பின் திருமணம் நடைபெற்றது. திருமணம் நடைபெற்ற சில நாட்களில் மனோகரியின் மனம் குழம்பிவிட்டது. அதற்கு ஊரவர்கள் பல காரணங்களைக் கூறி வருகின்றனர். முக்கியமாகச் சுந்தரேசன் இப்போது திருமணம் செய்துள்ள பெண்ணோடு முன்பே கள்ளத் தொடர்பு வைத்திருந்தவன் என்றும் அதை அறிந்த மனோகரி மனங்குழம்பியநிலையில் தற்கொலை செய்து கொண்டாள் என்று நல்லை நாதனே நம்புகிறார்"

"ஐயா" நினைவுகளில் இருந்து விடுபட்ட கதிரேசன் பரமேஸ்வரனைப் பார்த்தார்.

"மனம் இன்று மிகவும் குழம்பிவிட்டது. அதனால் உங்களோடு சில நிமிடங்கள் கதைத்தால் மனம் நிம்மதியடையும் என்று வந்தேன்"

இப்போது எல்லாம் வெறுத்துவிட்டது, "எல்லாம் மாயை என்று புரிகிறது. நிலத்தில் இருந்து விண்ணுலகம் வரை பரந்து நிற்கும் சிவபெருமானைத் தான் கதியாகக் கொண்டேன். உனது மனம் ஒருமைப்பாடு உடையது. அத்தகைய நீ என்னை ஆட்கொண்டபின் அருள்புரியாவிட்டால் நான் படும் துன்பத்தை யாரிடம் முறையிடுவது. எனது குறைகளை நான் யாரிடம் கூறுவது. இவ்வுலக வாழ்க்கை மிகவும் துன்பமானது. என்னை ஏற்றுக்கொள்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவதைப் போலத்தான் நானும் கூறுகிறேன். எனது மகளின் சாதகத்தைப் பார்த்த பல சோதிடர்கள் அவளுக்கு இருபத்தேழு வயது வரைதான் ஆயுள் என்றவர்கள். அதனால்தான் திருமணத்துக்கும் நான் ஒப்புக் கொண்டேன். அவள் இறந்தது இயல்பான ஒன்று. அதைத்தடைசெய்ய முடியாது. ஆனால் சுந்தரேசன் அவள் இறந்து மூன்று மாதங்கள்கூடக் கழியாத நிலையில் திருமணம் செய்யலாமா….? கடைசி ஆண்டுத்திவசம் முடியச் செய்திருக்கலாம்" என்று அழுதார்.

கதிரேசன் வெளிப்படையாக அழாவிட்டாலும், மனோகரி இறந்த நாளில் இருந்து மனதுக்குள் அழுதுகொண்டிருக்கிறார்.அவர் காலையில் சிவபூசை செய்யும்போது, "நான் உன் அடியவன். அதனால் மனோகரிக்கு இரங்கி பரமேஸ்வரனுடன் கதைத்து திருமணத்தை நடத்தி வைத்தேன். அவள் இறந்தமைக்கு நானும் ஒரு காரணி என்று நினைக்கிறேன். ஊரவர்கள் மிகமிகக் கேவலமாகச் சுந்தரேசனைப்பற்றிக் கதைக்கின்றனர். அதனால் எனக்கு வாழ்க்கை வெறுத்துவிட்டது. இனி வாழ்ந்ததுபோதும். உலகெங்கும் வியாபித்திருக்கின்ற உன்னை நம்பிப் போற்றி வணங்கி வருகிறேன்.

அதனால் உன்னைத்தவிர எனது துன்பங்களைக் கூறி ஆறுதல் அடைய எனக்கு யாரும் இல்லை. இப்போ இந்த விடயத்தை உனக்குப் பலமுறை கூறியபோதும் எனக்கு நிம்மதி உண்டாகவில்லை. அதனால் தாமதியாது என்னை உன்னோடு சேர்த்துக்கொள்" என்று கூறிவிட்டு வந்தார். இப்போ பரமேஸ்வரன் வந்து நிற்கிறார் என்று நினைத்தார் கதிரேசன்.

"பாரொடு விண்வரை பரந்து நின்று அருளும் பரமன் எது நடக்க வேண்டுமென்பதைத் தீர்மானிக்கின்றான். அதன்படி நடக்கட்டும்" என்றார் பரமேஸ்வரன்.

**வம்பனேன் தன்னை ஆண்டமா மணியே மற்றுநான்**

**பற்றிலேன் கண்டாய் உம்பரும் அறியா ஒருவனே இருவர்க்**

**குணர்விறந்துலக மூடுருவுஞ் செம்பெருமானே சிவபுரத்தரசே**

**திருப்பெருந்துறையுறை சிவனே எம்பெருமானே**

**என்னையாள்வானே என்னை நீ கூவிக் கொண்டருளே. 02**

"என்னென்ன நடக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளதோ அது தானே நடக்கும். அதனைச் சிவனைத் தவிர வேறு யார் அறிவார்கள். தேவர்களால் கூடச் சிவனையும் அவனது செயற்பாடுகளையும் அறிய முடிவதில்லை. சிவன் அகன்ற வஸ்து என்பது கூட அயனுக்கும் மாலுக்கும் கூட விளங்குவதில்லை. நாம் அறிவோமா என்ன? எனக்கு எவ்வளவோ உதவிகளைச் சிவன் செய்தவன். இருப்பினும் மகளை இழந்த துயரம் அவனை மகிழ்வுடன் வணங்க விடுகிறது இல்லை. அதனால்தான் நான் அவள் இறந்தபின்பு கோவிலுக்குச் செல்வதில்லை. எனக்குச் சிவனின்மீது எந்தக் கோபமும் இல்லை. அவரவரின் பாவபுண்ணியப்படி வாழ்க்கை நடைபெறுகிறது. வினையை விதைத்தவர்கள் அதைத்தானே அறுவடை செய்ய முடியும். இருந்தபோதும் பற்றுக்கள் சிலசமயம் உலகையே வெறுக்கச் செய்கின்றன" என்றார் பரமேஸ்வரன்.

"நான் முன்நின்று செய்த இந்தத் திருமணத்திற்கு இப்படியான ஒரு துன்பநிலை ஏற்பட்டதால் எனக்கும் உலக வாழ்வு வெறுத்துவிட்டது. மாணிக்கவாசக சுவாமிகள், "இனி நான் வேறு எதையம் நாடமாட்டேன். ஆளுடையானே என்னை உன்னோடு சேர்த்துவிடு" என்று சொல்வதைப் போலத்தான் எனது நிலையும் உள்ளது. கண் கலங்கினார் கதிரேசன்.

**பாடிமால் புகழும் பாதமே அல்லால் பற்றுநான் மற்றிலேன்**

**கண்டாய் தேடிநீ ஆண்டாய் சிவபுரத்தரசே**

**திருப்பெருந்துறையுறை  சிவனே ஊடுவ துனனோ டுவப்பதும்**

**உன்னை உணர்த்துவ துனக்கெனக்குறுதி வாடினேன் இங்கு**

**வாழ்கிலேன் கண்டாய் வருகஎன்றருள் புரியாயே.** **03**

"மகள் இறந்த பின்பு மாணிக்கவாசக சுவாமிகள்; "நீ எனக்கு அருள்புரிய வேண:டும் என்று நான் சண்டை பிடிப்பதும் உன்னோடுதான். மகிழ்ந்து கதைபேசி குலாவி இருப்பதும் உன்னோடுதான். எனது குறைகளைத் தெரிவிப்பதும் உன்னோடுதான். இந்த நிலை தொடர உனது அருள் வேண்டும்" என்று பிரார்த்திக்கிறேன் என்றார். நான் கடந்த மூன்ற மாதங்களாகச் சிவனோடு கடுமையாகச் சண்டை பிடிக்கிறேன். அதனால் பஞ்சாட்சர மந்திரத்தை ஓதுவதில்லை. நீறு பூசுவதில்லை. வாய்க்கு வந்தபடி ஏசுகிறேன். வேறு யாரை என்னால் ஏச முடியும். எனது மகளுக்கு முன்பே பித்து இருந்ததாம். அதை மறைத்துத் தனக்குத் திருமணம் செய்து வைத்து விட்டோமாம். எனக்கு அவனைச் செய்ய விருப்பமே இல்லை. இதைச் சொன்னால் குடும்பமே சண்டைக்கு வருது. அதனால் நான் சிவனுடன் சண்டை பிடிக்கிறேன். முன்பு எனது மகளுக்கு மருத்துவம் கற்க ஒரு புள்ளி குறைவாக இருந்தது. அதைச் சொல்லி அழுதேன். ஒரு மாணவன் வெளிநாட்டுக்குச் சென்று படிக்க விரும்பிச் சென்றதால் எனது மகளுக்கு மருத்துவம் படிக்க இடங்கிடைத்து. அந்த மகிழ்ச்சியையும் சிவனோடு கொண்டாடினேன். பின் எனது மகளுக்கு நல்ல புத்தியைக்கொடு என்று மன்றாடினேன். இப்போ அசுரனைப் போலச் செயற்படும் சுந்தரேசனைத் தண்டி என்று இரக்கிறேன். எதையும் மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவதைப்போலச் சிவனோடு தானே செய்ய முடியும்" என்று அழுதார் பரமேஸ்வரன்.

**வல்லைவாளரக்கர் புரமெரித்தானே மற்றுநான் பற்றிலேன்**

**கண்டாய் தில்லைவாழ் கூத்தா சிவபுரத்தரசே**

**திருப்பெருந்துறையுறை  சிவனே எல்லைமூவுலகும் உருவியன்**

**றிருவர் காணும்நாள் ஆகியீ றின்மை வல்லையாய் வளர்ந்தாய்**

**வாழ்கிலேன் கண்டாய் வருகஎன்றருள் புரியாயே.** **04**

"நீ சொல்வது உண்மைதான். நானும் யாருடனும் எதுவும் கதைப்பது குறைவு. ஏதாவது நேரில் சொன்னால் கேட்டுவிட்டுச் சென்று பொது இடங்களில்

விமர்சிக்கிறார்கள். சிவனுக்கு எதையும் சொல்லலாம், ஏசலாம், பாராட்டலாம். அரக்கர்களை அழித்துச் சிவபுரத்திற்கு அரசனானான். சிவபெருமான் மூவுலகையும் கடந்து நிற்பவன். அதனால் அவனுக்கு யாவும் புரியும். அரக்கர்களுக்கெல்லாம் புரியம். அதைவிட வரங்களைப் பெற்ற பின்னும் சிவன்தான் முழுமுதல்வன், அழிக்க முடியாதவன் என்றும் தெரியும். இருந்தும் வலியச் சண்டைக்குச் செல்கிறார்கள். இன்று அசுரர்குலம் அழிக்கப்பட்டபோதும் பல மனிதர்கள் அசுரக் குணத்தோடுதான் வாழ்கிறார்கள். அவர்கள் சிவன் முக்குணங்களுக்கு அப்பாற்பட்டவன் என்றும், மூவுலகையும் நடத்துவனென்றும், முத்தி என்ற பெருவாழ்வை அழிப்பவன் என்றும், அவனது திருவடி நிழலில் தான் பெருவாழ்வு இருக்கின்றது என்றும் உணர்கிறார்கள் இல்லை. அவர்கள் இவ்வுலகில் அனுபவிக்கும் சிற்றின்பங்களைப், பேரின்பங்களாகக் கருதுகின்றனர்" என்றார் பரமேஸ்வரன்.

"இந்த நிலையில்தான் மனிதரில் பலர் உள்ளனர். அவர்கள் தெரிந்தவர்கள் சொல்வதைக் கேட்பதும் இல்லை. தாம் கற்ற அறிவால் உணர்வதும் இல்லை. அதனால்தான் துன்பப்படுகின்றனர். சுந்தரேசன் கற்றவன். மனோகரியைத் திருமணம் செய்து தா என்று அலைந்தவன். இப்போ விசரி என்று தெரிந்தும் தனக்கு அவளைக் கட்டி வைத்துவிட்டேனாம். பல மாதங்களாகக் காதலித்த அவனுக்கு அவளைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவனது செயலால்தான் செல்லமாக வளர்ந்த மனோகரியின் மனநிலை பாதிப்படைந்தது. அதை மறைக்க அந்தக் குடும்பம் நாடகமாடுகிறது" என்றார் கதிரேசன்.

"எல்லாம் சிவன் செயல். அவன் எதையும் செய்யட்டும் நான் கேட்டுக் கொண்டே இருப்பேன்; எனது மனம் மகிழ்ச்சியடைந்த பின்புதான் நீறணிவேன்" என்றார் பரமேஸ்வரன்.

**பண்ணினேர் மொழியாள் பங்னநீயல்லால் பற்றுநான் மற்றிலேன்**

**கண்டாய் திண்ணமே ஆண்டாய் சிவபுரத்தரசே**

**திருப்பெருந்துறையுறை சிவனே எண்ணமே உடல்வாய் மூக்கொடு**

**செவிகண் என்றிவை நின்கணே வைத்து மண்ணின்மேல்**

**அடியேன் வாழ்கிலேன் கண்டாய் வருகஎன்றருள் புரியாயே. 05**

"கதிரேசண்ணை. மனதையும் ஐம்பொறிகளையும் சிவனின்மீது வைத்துத்தான் எனது குடும்பம் வாழ்ந்து வருவது உங்களுக்குத் தெரியும். எனது

மகளுக்குக் கண்டம் இருப்பதாக எல்லாச் சோதிடாகளும் சொன்னார்கள். எனக்குச் சோதிடத்தில் அணுவளவுகூட நம்பிக்கை இல்லை. அதனால் சிவனைத் தான் முழுமையாக நம்பி இருந்தேன். இல்வாழ்க்கையில் நான் எந்தக் குறையும் விடவில்லை. மனைவி பிள்ளைகள் உறவினர் சுற்றத்தவர்களுடன் அன்புடன் வாழ்ந்தேன். ஐம்பொறிகளையும் நான் அலையவிடாது சிவனின் மீதே வைத்திருந்தேன். இருப்பினும் விதி என்று ஒன்று இருக்கிறது. அறிந்து செய்யும் பாவங்கள் தான் பழிக்குரியன. அவைதான் வாழ்வில் எமக்குத் தெரியாது குறுக்கிட்டுத் துன்புறுத்தும். அறியாமல் செய்யும் பாவங்களும் பல உண்டு. ஒரு நாள் ஒரு சந்நியாசி எனது வீட்டுக்கு வந்து உணவு உண்டான். சிறிது நேரத்தில் அவனுக்கு வயிற்றுப்போக்கு உண்டானது. அவனை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றபோது நாம் கொடுத்த உணவு அவனுக்கு ஒத்துக்கொள்ளவில்லை. அந்த உணவைத் தாம் நாம் உண்டோம். அன்று மகாலிங்கமும் நல்லைநாதனும் என்னிடம் வந்தபோது அந்த உணவைத் தான் அவர்களுக்கும் கொடுத்தேன். வைத்தியர் சில கறிவகைகளை நெய்யுடன் உண்டால் சிலருக்கு ஒத்துக் கொள்ளாது" என்றார். இது நான் அறியாமல் செய்த பாவம். அதனால் அச் சந்நியாசி பெரும் துன்பப்பட்டான். இவ்வாறு அறியாது எத்தனை பாவங்களைச் செய்தேனோ தெரியாது. அதுதான் மகளின் வடிவில் வந்திருக்கிறது. ஐம்புலன்களை எவ்வளவுதான் அடக்கி வைத்திருந்தாலும் உணர்வுகள் பலவீனமடையும்போது தீய செயல்கள் தன்னையறியாமல் வெளிப்பட்டுவிடும். இதைத்தான் மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தில் சொல்கிறார். மனதும் ஐம்பொறிகளும்தான் இன்பத்திற்கும் துன்பத்திற்கும் மூலகாரணிகள். அவைதான் முத்திக்கும் நரகத்திற்கும் காரணிகள் ஆகின்றன" என்றார் பரமேஸ்வரன்.

**பஞ்சின்மெல்லடியாள் பங்கநீ யல்லால் பற்றுநான் மற்றிலேன்**

**கண்டாய் செஞ்செவே ஆண்டாய் சிவபுரத்தரசே**

**திருப்பெருந்துறையுறை சிவனே எண்ணமே அஞ்சினேன் நாயேன்**

**ஆண்டுநீ அளித்த அருளினை மருளினால் மறந்த வஞ்சனேன்**

**இங்கு வாழ்கிலேன் கண்டாய் வருக என்றருள் புரியாயே. 06**

சுந்தரேசனும் அவனது நண்பனான ரவிச்சந்திரனும் நன்றாகக் குடித்துவிட்டு கதிரேசனின் வீட்டுக்கு வந்தனர். சுந்தரேசன், கதிரேசனது பெயரைக் கேட்டாலே பயப்படுவான். ரவிச்சந்திரன் வேற்றூரவன். ஒன்றாக இருவரும் வேலை செய்பவர்கள். அதனால் குடித்தபின் ரவிச்சந்திரன் சுந்தரேசனுக்கு வேண்டாதவற்றைச் சொல்ல அவன் தன்னை மறந்து கதிரேசனின் வீட்டுக்கு வந்தான். குடிக்கும் இடத்தில் இருவரும்

கதைப்பதைக் கேட்டுக்கொண்டு குடித்த நாகநாதன் அவர்கள் கதைத்ததை நவராசாவுக்கச் சொல்ல நவராசா கதிரேசனது வீட்டுக்கு வந்தான். நாகநாதன் அதைப் பலருக்குச் சொன்னமையால் பலர் கதிரேசனது வீட்டுக்கு வந்தனர். சுந்தரேசனைக் கண்ட நவராசா சொன்னான்; “ஐயாவின் வீட்டையும், சிவன்கோவிலையும் நாம் சமமாக மதிப்பவர்கள் என்பது உனக்குத் தெரியும். ஏன் இங்கு குடித்துவிட:ட வந்தாய்?” நவராசா அதட்டினான்.

“நீ யார் அதைக் கேட்க” என்று ரவிச்சந்திரன் சொல்ல நவராசா ஓங்கி அவனது கன்னத்தில் அடித்தான். ரவிச்சந்திரன் நின்ற இடத்திலேயே சுருண்டு விழுந்தான். அப்போது அங்கு வந்த கதிரேசன் நவராசாவின் கையைப் பிடித்தார்.

“சுந்தரேசா, நான் உனக்கு என்ன செய்தேன் என்று கேட்பதற்கு துணையுடன் வந்தாய். குடிக்கக்கூடாது என்று நாம் எம்மூர் இளைஞர்களுக்குச் சொல்லியுள்ளேன். அவர்கள் குடித்துவிட்டு ஏறுக்கு மாறாகக் கதைத்தால் அடிப்பார்கள் என்று உனக்குத் தெரியாதுா…? புலன்கள் மயக்கமடைவதால்தான் இவ்வாறான செயல்கள் இடம்பெறுகின்றன. இயல்பாகவே புலன்கள் சுயநினைவை இழப்பவை. குடித்தால் எப்படி இருக்கும். அதிகமானவர்கள் முயற்சியில்லாமையால்தான் குடிக்கின்றனர். அது அவர்களது வாழ்க்கையைக் கெடுக்கிறது. வாழ வைப்பதும், வாழ்வைக் கெடுப்பதும், மயக்கமும், முயற்சியின்மையும் தான். ஒரு குடும்பத்தின் புலன்களில் மயக்கமடைந்தும், முயற்சியில்லாமலும் இருந்தால் அக்குடும்பம் கெட்டுப்போம். ஒரு சிவனடியான் அவ்வாறிருந்தால் அவனது சிவவாழ்வு கெட்டழிந்து முத்தியை அழிக்கும். நீ குடிக்காத வேளைகளிலும், புலன்களின் மயக்கத்தில் இருப்பாய். இப்போ குடித்தமையால் புத்தி தடுமாறியுள்ளாய். யாரிவன், ஊரவன் போலத் தெரியவில்லை. அதனால்தான் உன்னுடன் வந்திருக்கிறான். அவனைக் கூட்டிக்கொண்டு விரைவாக வெளியே செல்” என்றார் கதிரேசன்.

**பரிதிவாழ் ஒளியாய் பாதமே யல்லால் பற்றுநான் மற்றிலேன்**

**கண்டாய் திருவுயர்கோலச் சிவபுரத்தரசே திருப்**

**பெருந்துறையுறை சிவனே கருணையே நோக்கி கசிந்துளம்**

**உருகிக் கலந்துநான் வாழுமா றறியா மருளனேன் உலகில்**

**வாழ்கிலேன் கண்டாய் வருக என்றருள் புரியாயே. 07**

அப்போது அங்கே நல்லைநாதன் வந்தார். அங்கு நடந்தவற்றை அறிந்து மிக்க துயரத்துடன் சுந்தரேசனின் அருகில் வந்து சொன்னார்; "உன்னையும் உனது பெற்றோரையும் திருத்தவே முடியாது. ஏனென்றால் நீ பட்டதாரி பெரிய உத்தியோகத்தன். உனது தந்தையும் தாயும் ஆசிரியர்கள். படித்துவிட்டோம் என்ற திமிர் உங்களுக்கு. நான் பாடசாலைப்பக்கம் செல்லவில்லை. கதிரேசண்ணையும் செல்லவில்லை. ஆனால் அனுபவத்தில் சகல அறிவையும் பெற்றுள்ளோம். ஊரில் யாருக்காவது பிரச்சினை, தகராறு, சண்டை வந்தால் சம்பந்தப்பட்டவர்கள் படித்தவர்களிடமா செல்கின்றனர். கதிரேசண்ணையிடம் தானே வருகின்றனர். உனது தந்தையால் தீர்க்கமுடியாத உனது கலியாணப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தவர் கதிரேசன். அப்படியிருக்கும்போது நீங்கள் அறிவுள்ளவர்கள், பட்டதாரிகள், கல்வியாளர்கள் என்று நீங்கள் சொல்லிக் கொள்கிறீர்களே தவிர இக்கிராமத்தில் உள்ள யாராவது உங்களைக் கல்வியாளர், அறிவாளிகள் என்று சொல்கிறார்களா…? வாழ்க்கை நடத்துவதற்குக் கல்வி தேவையில்லை. ஒழுக்கம் இருந்தால் போதும். வியாபாரம் செய்வதற்கு அறிவிருந்தால் போதும். வேலாயுதபிள்ளை ஒரு பெட்டிக்கடையை வைத்து வியாபாரத்தைத் தொடங்கியவன். இப்போ அவன் கணனிகளை விற்கத் தொடங்கியுள்ளான். உங்களைப்போல அரச ஊழியருக்குத்தான் கல்வி தேவை. ஆனால் அக்கல்வியால் உனது பெற்றோர் பயனடைந்தார்களா…? வேலாயுதபிள்ளை மாணவர்களுக்கென்று இலவச ஆங்கிலமும் கணித விஞ்ஞான பாடங்களும் தனது வீட்டில் வைத்து கற்பிக்கிறான். ஆசிரியர்கள் அவனுக்கு அடங்கி நன்றாகக் கற்பிக்கின்றனர். எனது பேரன் ஆங்கில பாடத்திற்கு ஐந்து புள்ளிகள் எடுப்பான். இப்போ ஐம்பது அறுபது புள்ளிகள் எடுக்கிறான். காலப்போக்கில் எண்பது புள்ளிகள் எடுப்பானென்று வேலாயுதபிள்ளை சொல்கிறார். இப்ப சொல் எதற்குக் கல்வி தேவை. மயக்கமும் முயற்சியின்மையும் முத்திக்குத் தடையாகும் என்ற மாணிக்கவாசக சுவாமிகள் விவேகம் இல்லாவிட்டாலும் "அருள்தாகம் இருந்தால் சாதனம் தடைப்படாது" என்கிறார். படிக்க வேண்டும். உழைக்க வேண்டும். முன்னேற வேண்டும் என்று விரும்புவனுக்கு எதுவும் செய்யும் வலு தானாக வந்து சேரும். அருள்தாகமுள்ள சிவனடியான் சிவனை அடைவான். அதற்கு விவேகமோ, கல்வியோ தேவையில்லை" என்றார் நல்லைநாதன்.

**பந்தனை விரலாள் பங்கநீ யல்லால் பற்றுநான் மற்றிலேன்**

**கண்டாய் செந்தழல் போல்வாய் சிவபுரத்தரசே**

**திருப்பெருந்துறையுறை  சிவனே அந்திமில் அமுதமே**

**அருள்பெரும் பொருளே ஆரமுதே அடியேனை வந்துய்ய**

**ஆண்டாய் வாழ்கிலேன்கண்டாய் வருகஎன்றருள் புரியாயே. 08**

சுந்தரேசனுடன் கதிரேசனது வீட்டுக்கு நியாயம் கேட்க வந்த ரவிச்சந்திரனுக்கு நவராசா அடித்த அடியினால் அவன் பலமணி நேரம் தடுமாறியபடி இருந்ததை அறிந்த பரமேஸ்வரன் கதிரேசனது வீட்டுக்கு வந்தார். அப்போது அங்கே நல்லைநாதனும் மகாலிங்கமும் இருந்தனர்.

ரவிச்சந்திரன் சுந்தரேசனின் நெருங்கிய உறவினன். அவன்தான் சுந்தரேசனைக் கெடுப்பது. திருமணம் முடிந்த பின் ரவிச்சந்திரன் வீட்டுக்கு வந்து எம்மை எச்சரித்தவன், ஏசினவன், அடிக்கக்கூட வந்தவன். அவனுக்கு நவராசா அடித்ததால் எனக்கு பெருமகிழ்வு ஏற்பட்டது. நல்லவர்கள் தீயசெயல்களைச் செய்யமாட்டார்கள். நீதியானவர்கள் தீயசெயல்களைத் தெரியாத்தனமாகச் செய்தால் அதை எடுத்துச் சொன்னால் புரிந்து கொள்வார்கள். திமிர்பிடித்தவர்கள் அறிந்தறிந்தும் தீயதையே செய்வார்கள். அதைக் கண்டித்தால் சண்டைக்கு வருவார்கள். அதனால் யாரும் அவர்களுக்குப் புத்தி சொல்லமாட்டார்கள். ரவிச்சந்திரன் மோசமானவன். அவனை அடித்துத்தான் திருத்த வேண்டும்” என்றார் பரமேஸ்வரன்.

“சிவனோடு சேரவேண்டிய நேரத்தில் இப்படிக் கதைக்கக் கூடாது. ஒரு தீய செயலைச் செய்தால் வரும் பாவம், அதை நினைத்தாலும் வரும்” என்றார் கதிரேசன்.

“அந்தமில்லாத அமிர்தமான சிவனை நம்பியிருப்பவர்களுக்கு மரணபயம் இல்லை. பாவம் வந்து சேரும் என்ற நினைப்பும் இல்லை. எதற்கும் திருந்தாதவர்களைச் சிவனே தண்டித்துத்தான் திருத்தியவர் இது இயல்பு” என்றார் பரமேஸ்வரன்.

“இறைவன் அமிர்தசொரூபமானவன் என்று உணர்பவன் மரணத்தை வென்றவனாவான். அவனுக்கு முத்திநிலை தானாக வந்து சேரும்” என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். இதையெல்லாம் சிவனடியார்களே உணர்கிறார்களில்லை. சிவனிடம் யாவற்றையும் ஒப்படைத்தபின் அது சரி, இது பிழை

என்பதுகூடப் பற்றை உண்டாக்கும். நவராசா ஏதோ எண்ணத்தில் செய்து விட்டான். அதை சிவனடியாரான நீங்கள் விமர்சிக்கக்கூடாது" என்றார் கதிரேசன்.

**பாவநாசாவுன் பரதமே யல்லால் பற்றுநான் மற்றிலேன்**

**கண்டாய் தேவர் தந்தேவே சிவபுரத்தரசே**

**திருப்பெருந்துறையுறை சிவனே மூவுல குருவ இருவர்கீழ்**

**மேலாய் முழங்கழலாய் நிமிர்ந்தானே மாவுரி யானே**

**வாழ்கிலேன் கண்டாய் வருக என்றருள் புரியாயே. 09**

"பரமேஸ்வரா, சிவனது தீவண்ணத்தின் அடியையும் முடியையும் காணாத இருவரும் தமக்குள் யார் பெரியவர் என்று விவாதித்து மகிழ்ந்தது மூவுலகில் வசிப்பவர்களுக்குத் தெரியும். சிவன் யானையின் தோலை உரித்துப் போர்த்தது அகங்காரத்தை வென்றமைக்கான அறிகுறியாகும். அகங்காரம் அழிந்தால் பாவமும் சேர்ந்து அழியும். பாவமற்ற நிலைதான் முத்திநிலை" என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். இங்கே வாழும் மனிதர்கள் சிவனின் அடிமுடி தேடியவர்களைப்போலத் தமக்குள் தாமே வீராப்புப் பேசி மகிழ்கின்றனர். சிவன் யானையின் தோலை உரித்துப் போர்த்தது தானே வலிமையுள்ளவன், பெரியவன் என்ற நினைப்புடன் வந்த அசுரனின் அகங்காரத்தை அழிக்க. சிவனின் ஒவ்வொரு திருவிளையாடல்களும் எம்மைப் பண்படுத்த வேண்டும். அதனால் முத்தி கிடைக்க வேண்டும் என்பதையே சிவன் விரும்புகிறான். அவற்றின் உண்மைத்தன்மையை உணர்பவர்கள் யார்? சிவனடியார் என்று சொல்லிக் கொள்ளும் பலரின் அகங்காரம் அடங்கவில்லை. அப்படியிருக்கும்போது ஏன் அவர்கள் சிவனை வணங்க வேண்டும். இச் செய்கை சேரவேண்டிய இடம் எதுவென்று தீர்மானிக்காது பயணம் செய்வதைப் போன்றது. எப்படி எடுத்துச் சொன்னாலும் பலருக்கு இது விளங்குவது இல்லை" என்றார் கதிரேசன்.

**பழுதிலசொல் புகழால் பங்கநீயல்லால் பற்றுநான் மற்றிலேன்**

**கண்டாய் செழுமதி அணிந்தாய் சிவபுரத்தரசே**

**திருப்பெருந்துறையுறைச் சிவனே தொழுவனோ பிறரைத்**

**துதிப்பனோ எனக்கோர் துணையென நினைவனோ**

**சொல்லாய் மழவிடையானே வாழ்கிலேன் கண்டாய் வருக**

**என்றருள் புரியாயே. 10**

"பரமேஸ்வரா, வணங்குவதற்கும் சார்ந்திருப்பதற்கும் சக்தியோடு கூடியிருக:கம் சிவனைத் தவிர வேறு பொருட்கள் எவையும் உலகில் இல்லை. உலக வாழ்வினும் சரி, மறுமை வாழ்வினும் சரி அவன்தான் கதி" என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். இது தான் உண்மை. இனம், சனம், உறவென்று ஆயிரக்கணக்கானோர் ஒவ்வொருவருக்கும் இருக்கின்றார்கள். அவர்கள் இன்பத்திலும், துன்பத்திலும் கலந்து சிறப்பிப்பார்களே தவிர அதில் பங்கு கொள்வார்களா…? சிவன் மீது பூரணமான நம்பிக்கை வைத்தால் யாரோ ஒருவன் உதவிக்கு வருவான். அது வாழும் உலகில் சிவனால் ஏற்படுத்தப்படுவது. மறுமை உலகில் சிவனைத் தவிர வேறு எவரும் வரமாட்டார். உன்னைப்பற்றி ரவிச்சந்திரன் தெருத்தெருவாகப் பேசிக் கொண்டு திரிந்தபோது யாரும் கேட்கவில்லை. என்னைப்பற்றிப் பேசியபோது ஊரவர் பலர் வந்து விட்டனர். இது நான் சிவனை முழுமையாக நம்பியதால் உண்டான பலன். எதையும் ஆராயாது அவனிடம் விட்டுவிட்டுச் சும்மா இருந்தால் அவன் கவனிப்பான் அதை விட்டுவிட்டு நாம் பொறுப்பைக் கையில் எடுத்தால் சிவனும் வாரன். மக்களும் வரமாட்டார்கள். அதை நம்பித்தான் நான் செயல்களில் ஈடுபடுகின்றேன். பல திருமணங்களைச் செய்து வைத்தேன். ஓரிரு திருமணங்கள் குழப்பத்தில் முடிவடைந்தன. இது எனக்கு அப்பாற்பட்ட விடயம். சிவனுக்கும் அப்பாற்பட்ட விடயம். பாவபுண்ணியப்படி வரும் வாழ்க்கையில் பிரச்சினைகள் தீர நம்பிக்கையுடன் அவற்றைச் சிவனிடம் ஒப்படை. அது தானாக நடைபெறும். ஏனென்றால் நாம் வணங்கி முறையிடக்கூடியவன் சிவன் மட்டும் தான். அவனைச் சார்ந்திருந்ததால் துன்பம் வராது" என்றார் கதிரேசன்.

திருச்சிற்றம்பலம்.